வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூலை - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, July - 2019

FWC

தரம் :- 12 (2020)	கணக்கீடு	நேரம் : 3 மணித்தியாலம் 10 நிமிடம்

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :....................................

- *01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி I

01. நிதிக்கணக்கீடு உள்ளீடுகளில் சரியானது
   1) வரலாற்றுத்தகவல்கள்
   2) எதிர்வு கூறல் தகவல்கள்
   3) கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள்
   4) நிதிக் கூற்றுக்கள்
   5) எல்லைக்கிரயத் தகவல்கள் (……....)

02. வணிக அலகு தொடர்பில் அக்கறை காட்டும் பிரிவினர்களும், அவ்வாறு அக்கறை காட்டுவதற்கான காரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

	பிரிவினர்	அக்கறை காட்டுவதற்கான காரணம்
1)	ஊழியர்கள்	A. பொறுப்பு உத்தரவாதத்தை நிறைவேற்ற சிறந்த நிலைப்பாடு வணிகத்துக்கு உள்ளதா?
2)	அரசாங்கம்	B. எதிர்கால உற்பத்தி தொடர்பான தீர்மானம் எடுத்தல்.
3)	முகாமையாளர்	C. தேவையான அறிக்கைகள் உரியவாறு சமர்ப்பிக்கப்படுகிறதா?
4)	வாடிக்கையாளர்	D. முதலீட்டுக்கு ஏற்ற அனுகூலங்கள் காணப்படுகின்றதா?
5)	உரிமையாளர்	E. தொழில்பாதுகாப்பு காணப்படுகின்றதா?

மேலே தரப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் வணிக அலகின் மீது அக்கறை காட்டுவதற்கான காரணங்களை ஒழுங்கு முறையாக காட்டும் விடை எது?

1) E, C, B, A, D
2) A, B, C, D, E
3) E, D, C, B, A
4) B, C, D, E, A
5) E, D, B, A, C (……....)

agaram.lk

03. 2019.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் நட்டமாக ரூ 75 000 தைப் பெற்ற வணிகமொன்றின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

	ரூபா 000
• வருடத்துக்கான மொத்தப் பொறுப்பு அதிகரிப்பு	900
• பற்றுக்கள்	50
• மேலதிக மூலதனமிடல்	225

2019.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் சொத்துக்களின் அதிகரிப்பு அல்லது குறைவின் பெறுமதியைக் குறிப்பிடுக.

1) ரூபா 825 000 ஆல் அதிகரித்துள்ளது.
2) ரூபா 975 000 ஆல் குறைவடைந்துள்ளது.
3) ரூபா 975 000 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.
4) ரூ 1 000 000 த்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.
5) ரூ 1 150 000 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. (……....)

04. நிரல் X இல் முதன்மை ஏடுகளும் நிரல் Y இல் மூல ஆவணங்களும் காட்டப்பட்டுள்ளன.

நிரல் X	**நிரல் Y**
1) காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு	A – விற்பனைப்பட்டியல்
2) விற்பனை நாட்குறிப்பேடு	B – பொது நாட்குறிப்பு கைச்சாத்து
3) பொது நாட்குறிப்பேடு	C – வரவுத்தாள்
4) உட்திரும்பல் நாட்குறிப்பேடு	D – கொடுப்பனவுக்கைச்சாத்து
5) வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு	E – செலவுத்தாள்

agaram.lk

நிரல் X இல் குறிப்பிடப்பட்டுள்ள முதன்மை ஏடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணங்களை நிரல் Y யுடன் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடை

1) A, D, B, E, C 2) B, A, D, E, C 3) C, A, B, E, D
4) D, A, B, C, E 5) D, A, B, E, C (……....)

05. வணிகமொன்றில் 2019 மே 01 இல் சில்லறைக்காசு மீதி ரூபா 700 காணப்பட்டது. 2019 ஏப்ரல் மாதம் சில்லறைக்காசுப் பகுப்பாய்வு நிரல்களின் மொத்தம் பின்வருமாறு

தபால் செலவு	ரூ 360
எழுது கருவிச் செலவு	ரூ 240
பிரயாணச் செலவு	ரூ 285
நானாவித செலவுகள்	ரூ 615

2019 மே மாதம் சில்லறைக்காசுக்கட்டு நிதி ரூ 500 ஆல் அதிகரிப்பு செய்யப்பட்டதற்கேற்ப 2019 மே 01 இல் கட்டுநிதி மீள் நிரப்பப்படும் தொகை யாது?

1) ரூ 1 500 2) ரூ 2 000 3) ரூ 460 4) ரூ 500 5) ரூ 2 460 (……....)

06. இளந்தளிர் வணிகத்தில் 2019.01.02 தொடக்கம் 2019.01.05 வரை நடந்தேறிய கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்கள் அடிப்படைக் கணக்கீட்டு சமன்பாட்டில் பின்வருமாறு. 2019.01.04 அன்று நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் மட்டும் இலாபநட்டத்தினை பாதிக்காது.

திகதி	சொத்துக்கள்	உரிமை	பொறுப்புக்கள்
2019.01.01	500 000	350 000	150 000
2019.01.02	60 000 – 75 000	-– 15 000	
2019.01.03	– 8 000	– 12 000	4 000
2019.01.04		9 000	– 9 000
2019.01.05	– 18 000	2 000	– 20 000

2019.01.02 தொடக்கம் 2019.01.05 வரை நடந்தேறிய கொடுக்கல் வாங்கல்களின் இறுதியில் முன்கொண்டு செல்லப்பட்ட தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டம் மற்றும் உரிமையாண்மை எவ்வளவு?

	முன்கொண்டு செல்லப்பட்ட இலாபம்	உரிமையாண்மை
1)	– 25 000	334 000
2)	16 000	334 000
3)	– 25 000	464 000
4)	– 16 000	464 000
5)	25 000	325 000

(……....)

agaram.lk

07. வருமதியாளரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு வங்கியால் மறுக்கப்பட்ட காசோலை ரூபா 25 000 இற்கான இரட்டைப்பதிவு யாது?

1) மறுக்கப்பட்ட காசோலை க/கு வரவு 25 000
காசுக்கட்டுப்பாட்டுக் க/கு செலவு 25 000
2) காசோலைக் கணக்கு வரவு 25 000
காசுக்கட்டுப்பாட்டுக் க/கு செலவு 25 000
3) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு வரவு 25 000
காசுக்கட்டுப்பாட்டுக் க/கு செலவு 25 000
4) காசுகட்டுப்பாட்டுக் க/கு வரவு 25 000
சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் க/கு செலவு 25 000
5) வங்கிக்கணக்கு வரவு 25 000
மறுக்கப்பட்ட காசோலைக் க/கு செலவு 25 000 (……....)

08. பெறுமதி சேர்வரிக்காகப் பதிவு செய்து கொண்டுள்ள இளமாறன் வணிகத்தில் திரட்டப்பட்ட 2019 மார்ச் மாத தகவல்கள் வருமாறு

- 2018 ஏப்ரல் 1 இல் VAT வரவு மீதி ரூ. 9650
- VAT 10% உள்ளடங்களாக விற்பனைப் பெறுமதி ரூ. 176 000
- கொள்வனவு ரூ 90, 000 VAT 10% கணிக்கப்படல் வேண்டும்.
- VAT 10% உள்ளடங்கிய வெளித்திரும்பல் ரூ 5 500
- காசாகச் செலுத்திய பெறுமதி சேர் வரி ரூ. 3 500

2019 மார்ச் 31 இல் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய VAT கணக்கு மீதி யாது?

1) பொறுப்பு ரூ 7 500 2) சொத்து ரூ 4 000 3) பொறுப்பு ரூ 4 000
4) சொத்து ரூ 5 650 5) பொறுப்பு ரூ 5 650 (……....)

09. கடலரசன் வணிகத்தின் 2019 ஜனவரி மாதம் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் மேலதிக தகவல்களும் பின்வருமாறு

- பொருட்களின் கடன் கொள்வனவு ரூ 20 000 ஆக இருந்ததுடன் இவற்றுள் ரூ 15 000 பெறுமதியான பண்டங்கள் மாதத்தினுள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- அறவிடமுடியாக்கடன் பதிவளிப்பு ரூ 3 000 ஆகும். கடந்த வருடம் பதிவளிக்கப்பட்ட 1 000 பெறுமதியான அறவிடமுடியாக்கடன் ஜனவரி மாத்தினுள் மீளக் கிடைக்கப்பெற்றது.
- ஜனவரி மாதத்துக்கான கிடைத்த மின்சாரப் பட்டியல் ரூ 5 000 ஆகும். இது 2019 பெப்ரவரி 10ம் திகதி செலுத்தப்பட்டது.
- 2019 ஜனவரி மாதத்துக்கான சம்பளமான ரூ 10 000 அம்மாதத்தினுள் செலுத்தப்படவில்லை என்பதுடன் 2018 டிசம்பர் மாதச்சம்பளம் ரூபா 8 000 செலுத்தப்பட்டுள்ளது.

➢ மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் அறவிடமுடியாக்கடன் ஊடாக சீராக்கப்படுகிறது எனக் கொள்க.

மேற்குறிப்பிட்ட வணிகத்தின் 2019 ஜனவரி மாதத்தில் வருமானத்துக்கு எதிராக சீராக்க வேண்டிய மொத்தச் செலவுகள் எவ்வளவு?

1) ரூ 24 000 2) ரூ 25 000 3) ரூ 32 000 4) ரூ 36 000 5) ரூ 41 000 (……....)

10. தேறிய எனினும் கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் சொத்தாக கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்பது பின்வரும் எந்த கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு பொருத்தமானது?

A – கொள்கை மாறாமை B – அட்டுறு

C – இணைதல் D – தேறல்

1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும்

4) B, C மட்டும் 5) B, D மட்டும் (……....)

11. 31.03.2018 இல் வணிகமொன்றின் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 52 000 வரவு மீதியாகும். அத்தினத்தில் வங்கிக்கூற்றின் மீதி ரூ 90 000 ஆகும். வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு.

- பெற்ற, நிலையான வைப்பு வட்டி வருமானம் காசுக் கணக்கில் சீராக்கப்படாதவை ரூ 18 000
- வைப்புச் செய்து தீர்வையாகாத காசோலைகள் ரூ 48 000
- வைப்புச் செய்து மதிப்பிழந்த காசோலைகள் ரூ 8 000 காசுக் கணக்கில் சீராக்கப்படாதவை 31.03.2018 இல் வணிகத்தால் வரையப்பட்டு இன்னமும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலை எவ்வளவு?

1) ரூ 60 000 2) ரூ 76 000 3) ரூ 62 000

4) ரூ 54 000 5) ரூ 138 000

(……....)

agaram.lk

12. முல்லை வணிகத்தின் 2019.03.31 இல் தயாரித்த பரீட்சை மீதியின் மொத்தமானது சமப்படாமையினால் வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டு தேறிய இலாபமாக ரூ 300 000 கணிப்பிடப்பட்டதுடன், தொங்கல் கணக்கின் மீதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் வழுக்களும் விடுபடுதல்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

- உட்திரும்பல் ரூபா 20 000 கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.
- வாடகை கொடுப்பனவு ரூ 8 000 வாடகைக் கணக்கு, காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு இரண்டிலும் செலவு வைக்கப்பட்டு இருந்தது.
- பதிவளித்த அறவிடமுடியாக் கடன் ரூ 5 000 கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சரியான தேறிய இலாபத்தினையும், தொங்கல் கணக்கில் காணப்பட்ட மீதியையும் முறையாக காட்டும் விடை எது?

	சரியான தேறிய இலாபம் (ரூபா)	**தொங்கல் கணக்கு மீதி (ரூபா)**
1)	264 000	26 000 (செலவு)
2)	264 000	26 000 (வரவு)
3)	284 000	20 000 (செலவு)
4)	320 000	36 000 (வரவு)
5)	336 000	36 000 (செலவு)

(……....)

13. பங்குடமை வணிகமொன்றின் கணக்கு வைப்புத் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று / கூற்றுக்கள் எவை?

A. பங்குடமை வணிகத்தின் நன்மதிப்பினை மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்கும் போது மொத்த உரிமை உயர்வடையும்.

B. பங்குடமை வணிகத்தில் இருந்து ஓய்வு பெறுகின்ற பங்காளருக்கு செலுத்த வேண்டிய உரிமையினை கடன் கணக்கிற்கு மாற்றும் போது மொத்த உரிமை குறைவடையும்.

C. வணிகத்தின் செலவினை பங்காளர் காசாக செலுத்தும் போது மொத்த உரிமையாண்மையில் எந்த தாக்கமும் ஏற்படாது.

1) B மட்டும் 2) A, B மாத்திரம் 3) A, C மாத்திரம்
4) B, C மாத்திரம் 5) A, B, C எல்லாம் (……....)

14. உற்பத்தி வியாபார வணிகமொன்றின் உற்பத்திக் கிரயத்தினை கணிப்பதற்கான சமன்பாடுகளில் சரியானது / சரியானவை.

A. விற்பனைக்கிரயம் + முடிவுப்பொருள் அதிகரிப்பு.

B. முதன்மைக் கிரயம் + தொழிற்சாலைக் கிரயத்திலான குறைவேலை இருப்பில் அதிகரிப்பு + உற்பத்தி மேந்தலைகள்.

C. முதன்மைக்கிரயம் - உற்பத்தி மேந்தலைகள் - தொழிற்சாலைக் கிரயத்திலான குறைவேலை இருப்பு அறிவிப்பு.

D. முதன்மைக்கிரயம் + குறைவேலை இருப்புக் குறைவு + உற்பத்தி மேந்தலை.

1) C, D 2) B, D 3) A, D 4) A, B, C 5) A, C, D (……....)

agaram.lk

15. மலரவன் விளையாட்டுக் கழகத்தின் 2017.03.31 நிதி நிலைமைக் கூற்றில் எடுக்கப்பட்ட விடயங்கள்

திரண்ட நிதி	60 000
(+) வருமான மிகை	18 000
	78 000

31.03.2018 இல் காணப்பட்ட மொத்தச் சொத்துக்கள் ரூ 212 000 ஆகவும், திரண்ட நிதி தவிர்ந்த பொறுப்புக்கள் ரூ 62 000 ஆகவும் காணப்பட்டது.

2018.03.31 இல் முடிவடைந்த நிதி வருடம் தொடர்பில் பின்வரும் தவறுகள் இடம்பெற்றன.

- கட்டிட விஸ்தரிப்புக்கு பெற்ற நன்கொடை ரூபா 20, 000 வருமானச் செலவீனக் கணக்கில் காட்டப்பட்டமை.
- 2019.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அங்கத்தவர்களால் செலுத்திய சந்தா ரூ 6 000 வருமானமாக கணக்கிடப்பட்டது. தவறுகள் திருத்திய பின் 2018.03.31 இல் கழகத்தின் வருமான மிகை?

1) ரூ 46 000 2) ரூ 124 000 3) ரூ 64 000

4) ரூ 78 000 5) ரூ 44 000 (……....)

❖ **16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?**

16. பின்வரும் கூற்றுக்கள் நிதிக்கணக்கீட்டுடன் தொடர்புடையவையாயின் "சரி" எனவும் தொடர்பற்றவையாயின் "பிழை" எனவும் குறிப்பிடவும்.

		சரி / பிழை
A –	இது வணிகத்தின் கடந்தகால, எதிர்காலத்தகவல்களை வழங்குகின்றது.	……………
B –	இது கணக்கீட்டு நியமங்கள், சட்டங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றது.	……………
C –	இது நிறுவன முகாமையாளர்கள் தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை வழங்குகின்றது.	……………
D –	இது வெளியக மற்றும் உள்ளகத்தரப்பினர்களது தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடியது.	……………

17. வணிகமொன்றின் 2018 ஜுன் 1 இல் சில்லறைக்காசு மீதி ரூ 640 ஆகக் காணப்பட்டது. 2018 மே மாதம் சில்லறைச் செலவுகளின் மொத்தம் வருமாறு

தபால் செலவு	ரூ 390
உபசரிப்பு செலவு	ரூ 450
போக்குவரத்துச் செலவு	ரூ 385
எழுதுகருவிச் செலவு	ரூ 415
நானாவித செலவு	ரூ 370
கடன்கொடுநர் (அமுதவிழி)	ரூ ?

2018 ஜுன் 1 ஆந் திகதி கீட்டு நிதி ரூ 500 ஆல் அதிகரிப்பு செய்யப்பட்டதற்கேற்ப கட்டுநிதி மீள் நிரப்பல் தொகை ரூ 3 460 ஆகும். பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) 2018 மே மாதம் ஆரம்பத்தில் சில்லறைக்காசுக் கட்டுநிதி யாது?

……………………………………………………………………………………………

ஆ) 2018 மே மாதம் அமுதவிழி என்பவருக்கு செலுத்தப்பட்ட காசு தொடர்பான பொதுப் பேரேட்டுப் பதிவிற்கான நாட்குறிப்பு பதிவினைத் தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

agaram.lk

18. பின்வரும் நிகழ்வுகளுக்குப் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

அ) பற்றுக்களை அறிக்கைப்படுத்தல். ……………………………………

ஆ) வருமதி வருமானங்களை இனங்காணல் ……………………………………

இ) நிதி நிலைமைக் கூற்றில் வியாபார வருமதியாளரை சொத்தாகவும், வியாபாரக் கொடுக்குமதியாளரை பொறுப்பாகவும் காட்டப்படுதல். ……………………………………

ஈ) இறுதிச் சரக்கிருப்பினை "கிரயம்" அல்லது "தேறிய தேறத்தக்க பெறுமானம்" என்பவற்றில் குறைவான பெறுமானத்தில் அறிக்கைப்படுத்தல். ……………………………

19. 2019.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் இளந்திரை வணிகத்தில் எடுக்கப்பட்ட நிதிக்கணக்கீட்டுத் தகவல்கள் வருமாறு.

இலாபநட்ட கூற்றில் காட்டப்பட்ட,

ஏனைய வருமானம்	ரூ 15 000
மொத்த இலாபம்	ரூ 60 000
விற்பனைக் கிரயம்	ரூ 115 000
தேறிய சொத்து அதிகரிப்பு	ரூ 85 000
பற்றுக்கள்	ரூ 25 000
மேலதிக மூலதனம்	ரூ 80 000

மேலே தரப்பட்ட தகவல்களின்படி 2019.03.31ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான

அ) வருமானத்துக்கு எதிரான செலவீனம்? ……………………………………………………

ஆ) விற்பனை வருமானம் ……………………………………………………………………..

20. வணிகமொன்றின் 2019.03.31 இல் வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 80 000 ஆகும். எனினும் அத்திகதியில் காணப்பட்ட கடன்பட்டோர் பேரேட்டு மீதியின் மொத்தமானது வித்தியாசமாகக் காணப்பட்டது. வித்தியாசத்துக்கான காரணங்கள் பின்வருமாறு.

1) விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூ 2 000 இனால் குறைவாகக் காணப்பட்டது.
2) கடன் விற்பனை ரூ 20 000 விற்பனை நாட்குறிப்பேட்டில் ரூபா 2 000 எனப்பதிவு செய்யப்பட்டு இருந்தது.
3) ரூ 4 500 கடன் விற்பனை உரிய நபர்கணக்கில் ரூ 5 400 என பிரதி செய்யப்பட்டிருந்தது.
4) கொடுத்த கழிவு ரூ 500 கடன்படுநர் தனிப்பட்ட கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

2019.03.31 ஆம் திகதி நிதிநிலைமைக்கூற்றில் காட்ட வேண்டிய கடன்படுநர் கட்டுப்பாட்டு மீதி? ……………………..

21. எழுகதிர் வியாபாரம் தனது பொருட்களை கிரயத்தில் 25% கூட்டி விற்பனை செய்கின்றது. 31.03.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன..

- 10% பெறுமதிசேர் வரி உள்ளடங்கலாக கொள்வனவு பெறுமதி ரூ 132 000.
- 10% பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக விற்பனைப் பெறுமதி ரூ 220 000
- 31.03.2019 அன்று சரக்கிருப்பின் பெறுமதி ரூ. 33 000.

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) வருடத்தினுள் விற்கப்பட்ட பொருளின் கிரயம் ……………………………………………

ஆ) 01.04.2018 இல் சரக்கிருப்பின் பெறுமதி ……………………………………………..

22. இலாபநட்டங்களை சமமாக பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தணிகை, பொதிகை என்போர் நடத்துகின்ற பங்குடமை வணிகத்தில் 01.04.2019 ஆந்திகதியில் மல்லிகை புதிய பங்காளராக இணைத்துக் கொள்ளப்பட்டார். அன்றைய தினம் தணிகை, பொதிகை, மல்லிகை ஆகியோர் 3:2:1 எனும் விகிதத்தின் அடிப்படையில் இலாபநட்டங்களை பகிர உடன்பட்டனர். அத்தினத்தில் பங்குடமை வணிகத்தின் நன்மதிப்பினை சீராக்கியதன் பின் மல்லிகையின் மூலதனம் ரூ 50 000த்தால் குறைந்ததுடன் பொதிகையின் மூலதனம் ரூ 50 000 த்தால் அதிகரித்தது.

2019.04.01 பங்குடமை வணிகத்தின் நன்மதிப்பு? ……………………………………………………

23. 2018.04.01 இல் ரூபா 600 000 மூலதனமாக இட்டு ஆரம்பிக்கப்பட்ட புகழேந்தி வணிகமானது முறையாக கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவில்லை. கணக்கேடுகளில் எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு.

- 2019.03.31 இல் மொத்தச் சொத்துக்கள் ரூ 800 000 உம் மொத்தப் பொறுப்புக்கள் ரூ 350 000 ஆகும்.
- உரிமையாளர் கணக்காண்டில் ரூ 450 000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை வணிகத்திற்கு வழங்கியுள்ளார்.

இத்தகவலின் அடிப்படையில் வணிகத்தின் பெறுபேற்றினை கணிக்கும் போது சரியான நிதிப்பெறுபேறு? ……………………………………………..

24. சப்பாத்து உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு கிரயங்களையும் "நேர்க்கிரயம்" அல்லது "நேரில் கிரயம்" என வகைப்படுத்துக.

அ) இயந்திர இயக்குனர்களின் கூலிகள் ……………………………………………………

ஆ) இயந்திரப் பெறுமானத்தேய்வு ……………………………………………………

இ) பதனிடப்பட்ட தோலின் கிரயம் ……………………………………………………

ஈ) தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் ……………………………………………………

25. இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் கீழே தரப்பட்டுள்ள கணக்குகளுக்குப் பொருத்தமான கணக்கு வகைப்படுத்தல்களைக் குறிப்பிடுக.

அ) முற்பணமாக பெற்ற சந்தா ……………………………………………………

ஆ) வருமதிச் சந்தா ……………………………………………………

இ) ஆயுள் சந்தா மீதி ……………………………………………………

ஈ) பிரவேசக் கட்டணம் ……………………………………………………

(25X4=100 புள்ளிகள்)

agaram.lk

பகுதி II

அறிவுறுத்தல்கள் :-

- ❖ **முதலாம் வினா கட்டாய வினாவாகும். முதலாம் வினா உட்பட மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. இந்திரன், சந்திரன் பங்குடமையின் பங்காளிகளாவர். இவர்களின் பங்குடடை உடன்படிக்கை பின்வருமாறு

1) நிலையான மூலதனவட்டிவருடம் 10%

2) ஒவ்வொரு பங்காளியும் மாதாந்தச்சம்பளம் ரூ. 1000 பெற உரித்துடையவர்.

3) இலாப நட்டம் பங்காளரிடையே பின்வருமாறு பகிரப்படும் இந்திரன் - $\frac{3}{5}$ சந்திரன் - $\frac{2}{5}$

4) 31.03.2019 இல் பரீட்சை மீதி

விபரம்	வரவு	செலவு
மூலதனம் - இந்திரன்		200 000
- சந்திரன்		100 000
நடைமுறை கணக்கு - இந்திரன்		45 000
- சந்திரன்	36 000	
கொள்வனவு, விற்பனை	260 000	550 000
வியாபார வருமதி, வியாபார சென்மதி	40 000	30 000
திரும்பல்கள்	5 000	6 000
கழிவுகள்	3 000	4 000
ஆதனம் பொறி உபகரணம் (கிரயம், திரண்ட தேய்வு)	400 000	60 000
சம்பளம்	42 000	
காப்புறுதி நகரவரி	5 000	
மின்கட்டணம்	2 000	
EPF செலவு	12 000	
விநியோகச்செலவு	28 000	
முதலீடு	50 000	
முதலீட்டு வருமானம்		5 000
வியாபார வருமதிகளின் மதிப்பு குறைப்பு நட்டம் (அறவிடமுடியாக்கடன்)	3 000	
வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்ட படிகள் (01.04.2018) (ஐயக்கடன் ஒதுக்கம்)		3 000
உட்சுமை கூலி	8 000	
ஆரம்ப தொக்கு	18 500	
காகம் காசுக்கு சமனானவை	90 500	
	1 003 000	1 003 000

agaram.lk

மேலதிக தகவல்கள்

1) 31.03.2019 இல் சரக்கிருப்பு 30 000

2) ஆதனம் பொறி உபகரணத்திற்கு குன்றும் நிலுவை முறையில் ஆண்டுக்கு 8% தேய்வு கணித்து அதனை பின்வருமாறு பகிரப்படும்.

நிலைய நிர்வாகம் - $\frac{2}{5}$ பங்கு

விற்பனை விநியோகம் - $\frac{3}{5}$ பங்கு

3) 31.03.2019 இல் முற்பணமாக செலுத்திய காப்புறுதி ரூ. 500

4) 31.03.2019 இல் அட்டுறு விநியோக செலவு ரூ 2 000

5) வியாபார வருமதியாளர்களின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகளை வியாபார வருமதியாளர்களில் 10% சீராக்குக. (ஐயக்கடன் ஒதுக்கத்தினை 10% சீராக்குக)

6) 31.03.2019 இல் வருமதி முதலீட்டு வருமானம். ரூ 2 500.

7) ஆண்டு காலத்தில் தீவிபத்தில் ரூ 10 000 கிரயமான பொருட்கள் தீயால் சேதமடைந்தது. இப்பொருட்களின் அழிவில் 75% காப்புறுதி கம்பனி தர இணங்கிய போதிலும் இவைபற்றிய பதிவுகள் ஏடுகளில் இடம்பெறவில்லை.

8) பங்குடமை வணிகம் இந்திர னுக்கு சொந்தமான கட்டடத்தில் அமைந்திருப்பதால் அவருக்கு மாத வாடகையாக ரூ 500 வீதம் செலுத்த வேண்டும்.

9) சந்திரன் தனது சொந்த பணத்திலிருந்து பங்குடமையின் விற்பனை அபிவிருத்தி கருதி 3 000 இனை பயண செலவாக செலவு செய்துள்ளார். இது ஏடுகளில் பதியப்படவில்லை.

10) சம்பளம் என்பதனுள் பங்காளரால் எடுப்பனவு செய்யப்பட்ட அவர்களுடைய பின்வரும் தொகைகளிலான சம்பளம் உள்ளடங்கியுள்ளது.

இந்திரன் - ரூ 3 000

சந்திரன் - ரூ 2 000

வேண்டப்படுவது :-

1) 31.03.2019 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பங்குடமையின் இலாபநட்ட கூற்று. (பகிர்வு உட்பட)

2) பங்காளர் நடைமுறைக் கணக்கு.

3) 31.03.2019 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.

(20 புள்ளிகள்)

agaram.lk

02. அ) சிவன் வணிகத்தின் 2019.01.01 இல் நிதி நிலமைக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் வருமாறு.

	ரூ. (000)
காணி	1 400
மோட்டார் வாகனம்	1 000
தளபாட இணைப்பு	500
சரக்கிருப்பு	165
வியாபாரத்திற்கு கிடைக்க வேண்டியவை	135
காசு மீதி	550
12% வங்கிகடன்	100
வியாபாரத்திற்கு செலுத்த வேண்டியவை	450

- பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஜனவரி மாதத்தினுள் இடம் பெற்றுள்ளன.

1) ரூ 65 000 பெறுமதியான சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டன.

2) ரூ 80 000 பெறுமதியான பண்டங்கள் ரூ 115 000 இற்கு விற்பனை செய்யப்பட்டதுடன் அதில் ரூ 75 000 காசாக கிடைக்கப்பெற்றதுடன் எஞ்சியது கடனாகும்.

3) ஜனவரி மாதத்தில் கட்டட வாடகை செலுத்தியது ரூ 20 000

4) ரூ. 10 000 பெறுமதியான கடன்பட்டோரிடமிருந்து 5 % கழிவு கழித்து காசு கிடைத்தது.

5) சிவன் தனது வீட்டின் மின்சார கட்டணமான ரூ. 5 000 இனை வணிகப்பணத்திலிருந்து செலுத்தினார்.

6) வங்கிகடன் ரூ. 6 000 மீளச் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதில் உள்ளடக்க பட்டிருந்த கடன்வட்டி ரூ 1 000 ஆகும்.

வேண்டப்படுவது :-

1. *2019.01.31* இல் முடிவடையும் மாதத்தில் வணிகத்தில் இடம்பெற்றிருந்த மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களை கீழேதரப்பட்ட சமன்பாட்டில் காட்டுக.

கொடுக்கல் வாங்கல் இல	**சொத்து**				**பொறுப்பு**		**உரிமையாண்மை**
	ஆதம் பொறி உபகரணம்	வியாபார கிடைக்க வேண்டி யவை	சரக்கிருப்பு	காசு	வியா. செலுத்த வேண்டியவை	வங்கிகடன்	
மீ/வ							

2. தேறிய சொத்து அடிப்படையில் ஜனவரி மாத இலாபத்தை கணிக்கவும்.

(10 புள்ளிகள்)

ஆ) விநாயகர் தனியுரிமை வணிகமொன்றின் உரிமையாளராவார். கீழே காட்டப்பட்டுள்ள நிதி நிலமைக்கூற்று அவரின் வணிகத்தின் பயிற்சிபெறும் கணக்காளரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

***2018.12.31* இல் நிதி நிலமை கூற்று**

ஆதனம் பொறி மற்றும் உபகரணம்		*600 000*
சரக்கிருப்பு	*240 000*	
கடன்பட்டோர்	*110 000*	
காசு	*280 000*	
தொங்கல் கணக்கு	*100 000*	*730 000*
		1 330 000
மூலதனம்	*800 000*	
(+) தேறிய இலாபம்	*300 000*	
		1 100 000
கடன் கொடுநர்		*230 000*
		1 330 000

பின்வரும் வழுக்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன.

1) அறவிடமுடியா கடன் ரூ *3 500* கணக்குகளின் ரூ *5 300* எனப்பதிவு செய்யப்பட்டிருந்தது.
2) காசு விற்பனை ரூ *20 000* விற்பனை கணக்கில் இருமுறை செலவில் பதியப்பட்டது.
3) கடன் கொடுநருக்கான கொடுப்பனவு ரூ *65 000* உம், சம்பளம் ரூ *15 000* உம் காசு கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் பதியப்பட்ட போதிலும் கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு, சம்பள கணக்குகளில் பதியபடவில்லை.

வேண்டப்படுவது :-

1. மேற்குறிப்பிட்ட வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகளும், தேறிய இலாபத்தை சீராக்கும் கூற்றும்.
2. வழுக்களைத் திருத்திய பின்னர் *2018.12.31* இல் நிதி நிலமை கூற்று.

(10 புள்ளிகள்)

agaram.lk

03. வெற்றியரசன் வணிகத்தினால் நடாத்திச் செல்லப்படும் தனியுரிமை வணிகத்தின் சில்லறைச் செலவுகள் தவிர்ந்த ஏனைய சகல கொடுப்பனவுகளும் நடைமுறைக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் சகல பெறுவனவுகளும் வங்கிக்கணக்கிற்கு நேரடியாக வைப்பில் இடப்படுகிறது. கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஏனைய தகவல்கள் பின்வருமாறு

1) 2019 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பெறுவனவு	**ரூ (000 ல்)**
காசுக் கு விற்பனை	560
பாவனையில் இருந்து உபகரண விற்பனை	200
வருமதியாளரிடம் பெற்றது – அமீர்	320
பெற்ற வட்டி வருமானம்	60
வருமதியாளரிடம் பெற்றது – காதர்	150
கொடுப்பனவு	**ரூ (000 ல்)**
உடன் காசு கொள்வனவு	220
சென்மதியாளருக்கான கொடுப்பனவு இமாம்	300
செலவீனங்களுக்கான கொடுப்பனவு	240
எடுப்பனவு	40
உடன் காசு கொள்வனவு	200

2) 2019.03.01 இல் வணிகத்தின் காசு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 10 000 ஆக இருப்பதுடன், அது அத்திகதியில் காணப்பட்ட வங்கிக் கூற்றின் மீதியுடன் இணங்கியது.

3) கடன்பட்டோரான அமீருக்கு கொடுத்த கழிவு ரூ. 4 000 ஆக இருந்ததுடன் கடன் கொடுத்தோரான இமாமிடம் பெற்ற கழிவு ரூ. 3 000 ஆகக் காணப்பட்டது.

4) 2019 மார்ச் மாதத்தில் கிடைத்த வங்கிகூற்றின் பொழிப்பு.

செலவு வைக்கப்பட்ட காசோலை	1 000
வரவு வைக்கப்பட்ட காசோலை	7 00
வருமதியாளர் நேரடி வைப்பு	1 00
வங்கி அறவிட்ட வங்கிக்கட்டணம்	20
நிலையான கட்டளையின் கீழ் வங்கி செலுத்திய குத்தகை தவணைக்கட்டணம்	15
வைப்பில் இட்டு மதிப்பிழந்த காசோலைகள்	90

வேண்டப்படுவது :-

1. மேலே இலக்கம் (1) இன் தரவுகளின் உதவியுடன் 2019 மார்ச் மாதத்திற்கான காசுப்பெறுவனவு, காசுக்கொடுப்பனவு நாட்குறிப்பேடுகள்.
2. 2019.03.31 இல் காசுக்கணக்கினை சீராக்கி வங்கி இணக்க கூற்றினை தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

04. பாடசாலையொன்றில் ஆசிரியர்களினால் உருவாக்கப்பட்ட "குரு செவன" என்ற பெயர் கொண்ட ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான சில தகவல்கள் பின்வருமாறு.

- 2018.04.01 இல் சங்கத்திடம் ரூ. 80 000 காசு மீதியொன்று காணப்பட்டதுடன். அத்திகதியில் திரண்ட நிதி ரூ. 320 000.
- 2019.03.31 இல் சங்கத்தில் 124 அங்கத்தவர்கள் இருந்ததுடன் ஒருவரின் மாதாந்த அங்கத்துவ கட்டணம் ரூ. 200 ஆகும். நிதியாண்டினுள் இணைக்கப்பட்ட, விலகி சென்ற அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு.

agaram.lk

திகதி	இணைக்கப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை	விலகி சென்ற அங்கத்தவர் எண்ணிக்கை
2018.07.01	02	05
2018.10.01	02	–

சங்கத்தில் புதிதாக இணைந்த அங்கத்தவர்களிடமிருந்து உரியவாறு அங்கத்துவ கட்டணம் கிடைத்திருந்தாலும் விலகிச்சென்ற அங்கத்தவர்கள் நிதியாண்டுக்குரிய அங்கத்துவ கட்டணத்தை செலுத்தவில்லை.

- ஆசிரியர் நலன்புரிச்சங்கத்திற்கு உதவும் பொருட்டு "குரு பிரதீபா" என்ற பெயரில் நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டதுடன், டிக்கட் விற்பனை, நினைவு மலர் என்பவற்றின் மூலம் ரூ. 300 000 வருமானம் கிடைக்கப்பெற்றது. இதற்கான செலவுகளான டிக்கட் அச்சிடுதல் செலவு ரூ. 15 000 உம் உபசரிப்பு செலவு ரூ. 50 000 உம் நிகழ்ச்சியின் ஏனைய செலவுகளாக ரூ 35 000 உம் காசாக செலுத்தப்பட்டுள்ளது.

- 2018.04.01 இல் சங்கத்திற்கு ரூ. 200 000 பெறுமதியான கணினியொன்று நன்கொடையாக கிடைத்ததுடன் அதற்கு வருடாந்தம் 25% தேய்வு செய்வதற்கும் 04 வருடங்களினுள் இந்நன்கொடையினை சமமான வருமானமாக இனங்காணுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

- நிதியாண்டினுள் 12 அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வருடாந்தம் தலா ரூ. 15 000 வீதம் புலமைப்பரிசில் செலுத்த வேண்டியிருந்தாலும் 08 பேருக்கு மாத்திரமே காசாக செலுத்தப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது :-

2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான

1. வருடாந்த அங்கத்துவ சந்தாவருமானம்
2. பெறுவனவு கொடுப்பனவு கணக்கு.
3. வருமான செலவு கூற்று.
4. 2019.03.31 இல் திரண்ட நிதியை கணிப்பிடுக.

(10 புள்ளிகள்)

05. 01.04.2019 இல் கண்ணன் என்பவர் தனது சொந்த சேமிப்பிலிருந்து ரூ 900 000 முதலீடு செய்து உற்பத்தி வியாபாரமொன்றை ஆரம்பித்தார். 2019 ஏப்ரல் மாத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

1) காசுப்பெறுவனவு மற்றும் காசு கொடுப்பனவு நாளேடுகளில் பதியப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்.

பெறுவனவுகள்	**ரூ (000)**
விற்பனைகள்	ரூ. 6 000
கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவுகள்	ரூ 2 000
கொடுப்பனவுகள்	
மூலப்பொருட்கள் கொள்வனவுகள்	ரூ. 1 200
கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள்	ரூ. 800
இயந்திர இயக்குவிப்போருக்கான கூலிகள்	ரூ 400
உற்பத்தி மேற்பார்வையாளர்களின் சம்பளங்கள்	ரூ 700
தொழிற்சாலை மின்சாரம்	ரூ 60

agaram.lk

மூலப்பொருட்கள் கொள்வனவுக்கான முற்பணக்கொடுப்பனவு	ரூ	300
தொழிற்சாலை வாடகை	ரூ	600
நிர்வாக செலவுகள்	ரூ	200
இயந்திர கொள்வனவு (01.04.2019 இல்)	ரூ.	4 000

2) ஏனைய ஆரம்ப பதிவேடுகளின் மொத்தங்கள்.

விற்பனை நாளேடு	12 000	ரூ (000)
கொள்வனவு நாளேடு (மூலப்பொருள்)	8 000	
விற்பனை திரும்பல் நாளேடு	500	

3) மூலப்பொருள் கொள்வனவுகளுக்கான முற்பண கொடுப்பனவுகளில் ரூ. 100 000 பெறுமதியான மூலப்பொருட்கள் மாத்திரமே 27.04.2019 இல் பெறப்பட்டுள்ளன. இது கணக்குப் புத்தகங்களில் இன்னும் பதியப்படவில்லை..

4) மாதமொன்றுக்கான தொழிற்சாலை வாடகை ரூ. 200 000 ஆகும். முதல் காலாண்டுக்கான வாடகை செலுத்தப்பட்டுள்ளது.

5) 2019 ஏப்ரல் மாதத்திற்கான மின்சார பட்டியல் ரூ. 50 000 ஆனது 10.05.2019 இல் பெறப்பட்டுள்ளது.

6) இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகும். இதன் எஞ்சிய பெறுமதி ரூ. 400 000 ஆகும். இயந்திரமானது நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

7) மாத முடிவில், சரக்கிருப்பு மீதிகள் பின்வருமாறு இருந்தன.

	ரூ (000)
மூலப்பொருட்கள்	300
நடைமுறைவேலை (உற்பத்தி கிரயத்தில் பெறுமதியிடப்பட்டது)	80
முடிவடைந்த பொருட்கள்	100

வேண்டப்படுவது :-

1. 2019 ஏப்ரல் மாதத்திற்கான பொதுப்பேரேட்டிலுள்ள பின்வரும் கணக்குகள் (T மாதிரியை பயன்படுத்துக)
   - i) விற்பனை கணக்கு
   - ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு
   - iii) மூலப்பொருள் கொள்வனவு கணக்கு
   - iv) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு
   - v) முற்பண கொடுப்பனவு கணக்கு

2. 2019 ஏப்ரல் மாதத்திற்கான உற்பத்தி கிரயகூற்று.
3. 2019 ஏப்ரல் மாதத்திற்கான வருமான கூற்று

(10 புள்ளிகள்)

agaram.lk